பாடசாலை மட்டக் கணிப்பீடு

முதலாம் தவணைக் கணிப்பீடு - 2026

தரம் 12 (2027) வணிகக்கல்வி- 32-T-1,11

மூன்று மணித்தியாலம் 10 நிமிடங்கள்

அறிவுறுத்தல்கள்

- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- 1 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

வினாத்தாள் 1

வினா இல	புள்ளிகள்
01-15	.....
16-25	.....
மொத்தம்	.....

01. பின்வரும் அட்டவணையின் X மற்றும் Y நிரல்களில் இருந்து, மனிதத் தேவைகளானது எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றது என்பதுடன் தொடர்புடைய சரியான சோடியைத் தெரிவுசெய்க.

X	Y
1) வலு (சக்தி)	A. மின்சாரம்
2) போக்குவரத்து	B. நெடுஞ்சாலை
3) களியாட்டம் (பொழுதுபோக்கு)	C. உணவு
4) தொடர்பாடல்	D. தகவல் பரிமாற்றம்
5) சுகாதாரம்	E. சிறந்த உடல்நலம்

(.....)

02. பின்வருவன சில வேறுபட்ட கொடுக்கல்வாங்கல்கள் ஆகும்.

A. சாரங்கன் தனது தனிப்பட்ட மோட்டார் வாகனத்தினை சரண் என்பவருக்கு ரூ 5 மில்லியனுக்கு விற்பனை செய்தார்.

B. திலகா மரக்கறிகளை தனது தோட்டத்தில் வளர்த்து அவற்றை தனது வீட்டுத் தேவைக்கு பயன்படுத்துகின்றார்.

C. சிந்து குரக்கன் ரொட்டிகளை வீட்டில் தயார்செய்து அவற்றை தனது பாடசாலைச் சிற்றுண்டிச்சாலைக்கு ஒவ்வொரு நாளும் விநியோகம் செய்து வருகின்றார்.

D. சில்லறைக் கடையை நடாத்தும் நிலா, நாளாந்தம் கடைக்கு வரும் வறியவர்களுக்கு சிறிய உதவிகளை செய்தார்.

E. சரிகா மோட்டார் நிறுவனமானது கமல் என்பவரின் தனிப்பட்ட பாவனைக்காக வாகனம் ஒன்றை விற்பனை செய்தது.

மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கல்களில் வணிகக் கொடுக்கல்வாங்கல்களை மட்டும் தெரிவுசெய்க.

(1) A,E (2) B,C (3) C, E (4) DE (5) AD (.....)

Past Papers Wiki

03. வணிகப்பரம்பல் தொடர்பாக ஐந்து மாணவர்களின் கூற்றுக்கள் வருமாறு

A. மிகை உற்பத்தியினை மற்றுமோர் மிகை உற்பத்தியுடன் பரிமாற்றம் செய்தல் பண்டமாற்று என்பதாகும்.

B. மிகை உற்பத்தி காரணமாகவே சிறப்புத்தேர்ச்சி ஏற்பட்டது.

C. பண்டமாற்று முறையே வணிகப்பரம்பலின் முதலாவது படியாகும்.

D. பண்டமாற்று முறையின் குறைபாடே நேரில் உற்பத்திக்கு வித்திட்டது.

E. இன்று வரையான இலத்திரனியல் வர்த்தகத்தின் தொடக்கம் பண்டமாற்று என்றே கருதமுடியும்.

மேற்படி மாணவர்களின் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றுக்களினைக் கொண்ட தொகுதி யாது?

(1) A, B C (2) C, D, E (3) A, C, E (4) B, C, D (5) A, B, D (……..)

❖ கீழே தரப்படும் சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு (4) , (5) வினாக்களுக்கு விடை தருக.

சிறு தானியங்களைப் பயன்படுத்தி சத்து மா உற்பத்திகளை மேற்கொண்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு விரும்பிய வருண் என்பவர் அவற்றிற்கு தேவையான சட்ட ஆலோசனைகளை துறை சார்ந்த வழக்கறிஞரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

04. சட்ட ஆலோசனைகளைப் பெறுதல் என்பது உள்ளடங்கும் உற்பத்திக்காரணியாகக் கருதப்படுவது

(1) காலம் (2) அறிவு (3) நிலம் (4) மூலதனம் (5) முயற்சி (……)

05. **சிறு தானியங்களைப் பயன்படுத்தி சத்து மா உற்பத்திகளை மேற்கொள்ளல்** என்ற விடயத்துடன் தொடர்புபட்ட வகையில் வணிகங்களை வகைப்படுத்தும் நியதிகளை உள்ளடக்கும் சரியான விடையாக அமைவது

(1) மூன்றாம் நிலை உற்பத்தியும், சேவைத்துறை உற்பத்தியும்
(2) முதலாம் நிலை உற்பத்தியும், சேவைத்துறை உற்பத்தியும்
(3) முதலாம் நிலை உற்பத்தியும், விவசாயத்துறை உற்பத்தியும்
(4) முதலாம் நிலை உற்பத்தியும், இரண்டாம் நிலை உற்பத்தியும்
(5) கைத்தொழில் உற்பத்தியும், இரண்டாம் நிலை உற்பத்தியும்

06. கீழே தரப்பட்ட சூழல் காரணிகளில் சமூக கலாசார சூழல் காரணிகளை மட்டும் இனங்காட்டும் விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

(1) தனிநபர் நம்பிக்கைகள், பெறுமானங்கள், பழக்க வழக்கங்கள், சமய நம்பிக்கைகள்
(2) சனத்தொகை அளவு, பல்லின சமூக அமைப்பு, வயது மட்டம், மனை அமைப்பு
(3) கால நிலை வானிலை மாற்றங்கள், புவி அமைவிடம், வளங்களைக் கண்டுபிடித்தல்
(4) திறந்த பொருளாதாரக் கொள்கை, வரவு செலவுத் திட்டக் கொள்கை, விதிகள், பிரமாணங்கள்
(5) மொத்த தேசிய உற்பத்தி, வேலைவாய்ப்பு, சேமிப்பு, முதலீடு (……)

07. பின்வருவனவற்றுள் தனியார் பாடசாலை ஒன்றுக்கு இருக்கக்கூடிய அண்மிய சூழற்காரணிகளை மட்டும் கொண்ட விடைத் தெரிவு யாது?

(1) அரச பாடசாலைகள், பாடசாலை அதிபர், புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தனியார் பாடசாலை
(2) ஆசிரியர்கள், அரச பாடசாலை, மாணவர்கள்
(3) மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், அரச பாடசாலை
(4) அரச பாடசாலைகள், பாடசாலைக்குத் தேவையான உபகரணங்களை வழங்குவோர், புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தனியார் பாடசாலை
(5) பாடசாலைக்கட்டடம், பாடசாலை தளபாடங்கள், பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பு (……..)

08. நிலைபேறான அபிவிருத்திக்கு வணிகங்களின் பங்களிப்புக்கள் சில கீழே தரப்படுகின்றன.

A. பூரண வேலைவாய்ப்பு
B. இடர் முகாமைத்துவம்
C. சர்வதேச வியாபாரம்
D. மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தல்.
E. வளப்பயன்பாடு
F. வறுமை நிலையை இழிவுபடுத்தல்.
G. மனித மூலதனத்தைப் பராமரித்தல்.

மேற்குறிப்பிட்டவற்றுள் சமூக கலாசார நிலைபேறான தன்மைக்கு வணிகங்களின் பங்களிப்பினை குறித்து நிற்கும் எழுத்துக்களாக அமைவது

(1) D, F, G (2) A, B, E (3) C, D, E (4) E, F, G (5) B, C, D (……)

09. பின்வரும் செலவுகளில் அரசின் மூலதனச் செலவாகக் கருதப்பட முடியாதது
(1) வீதி நிர்மாணம்
(2) பாலங்கள் நிர்மாணம்
(3) தொலைத் தொடர்பு கோபுரம் அமைத்தல்
(4) சம்பளமும் கூலியும்
(5) துறைமுக அபிவிருத்தி (.....)

10. பின்வரும் அட்டவணையில் X நிரலில் நியமங்களது குறியீடுகளும், Y நிரலில் நியமங்களது பெயர்களும் தரப்பட்டுள்ளன.

X	Y
A. ISO 9001 B. ISO 14001 C. ISO 22000 D. ISO 27000 E. OHSAS 18001	1. உணவு பாதுகாப்பு முகாமை 2. தகவல் பாதுகாப்பு முகாமை 3. தொழில் சுகாதாரப் பாதுகாப்பு முகாமை 4. சூழல் முகாமைத்துவ முறைமை 5. தர முகாமைத்துவ முறைமை

(1) A - 1 B - 2 C - 3 D - 4 E – 5 (2) A - 1 B - 3 C - 4 D - 5 E - 2
(3) A - 5 B - 4 C - 2 D - 1 E - 3 (4) A - 5 B - 4 C - 1 D - 2 E - 3
(5) A - 5 B - 3 C - 4 D - 2 E – 1 (.....)

11. நாணயக் கொள்கைக்கும், இறைக் கொள்கைகளுக்குமுரிய உருப்படிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.
A. ஓரிரவு கொள்கை வீதம்
B. அதிகரித்துச் செல்லும் வட்டிக் கொடுப்பனவுகள்
C. வரியும் தண்டப் பணமும்
D. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்
இவற்றில் நாணயக் கொள்கைக்கும், இறைக் கொள்கைகளுக்குரிய உருப்படிகளை ஒழுங்குமுறையாகக் காட்டும் தொகுதியாக இருப்பது,
(1) A, B யிலும் C, D யிலும் ஆகும். (2) A, C யிலும் B, D யிலும் ஆகும்.
(3) A, D யிலும் B, C யிலும் ஆகும். (4) B, C யிலும் A, D யிலும் ஆகும்.
(5) B, D யிலும் A, C யிலும் ஆகும். (.....)

12. இலங்கையில் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியை அறவிடும் நிறுவகம் எது?
(1) உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
(2) பொருத்தமான உள்ளூராட்சி நிறுவனங்கள்
(3) கலால் திணைக்களம்
(4) சுங்கத் திணைக்களம்
(5) குடிவரவு, குடியகழ்வுத் திணைக்களம் (.....)

13. நிலைபேறான அபிவிருத்தியை மிகச் சிறப்பாக விளக்கும் கூற்றை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.
(1) நாட்டின் மெய்த்தேசிய உற்பத்தி தொடர்ச்சியாக விருத்தியடைவதுடன் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைதல்.
(2) வேலையின்மை, வருமான வேறுபாடு, வறுமை என்பன சமூகத்திலிருந்து விலகுவதன் காரணமாக உருவாகின்ற நிலைமையாகும்.
(3) எதிர்காலச் சந்ததியினருக்கு அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு காணப்படுகின்ற உரிமையினை மீறாமல் சமகாலத்தில் தேவைகளை பூர்த்தி செய்வதினூடாக அபிவிருத்தியினைப் பெற்றுக்கொள்ளல்.
(4) இயற்கைச் சூழலை அழிக்காமல் வினைத்திறனான மாற்றங்களை செய்வது எவ்வாறு என்பது தொடர்பில் கவனம் செலுத்தி எதிர்காலச் சந்ததியினருக்காக பூகோளச் சூழலைப் பாதுகாத்துக் கொள்ளல்.
(5) தற்கால மக்களின் தேவைகளை நிறைவு செய்வதினூடாக மானிட அபிவிருத்தியினை ஏற்படுத்துதலும் எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளை மீறாமல் மேற்கொள்வதற்கு வழிகளை ஏற்படுத்திக் கொள்ளல் (.....)

PAST PAPERS WIKI

14. அரசாங்கம் ஒன்றின் இலக்குகள் X நிரலிலும் அவ்வாறான இலக்குகளை அடைவதற்கு வணிகத்துறையின் பங்களிப்புக்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

X	Y
1. முறையான பொருளாதார அபிவிருத்தியும் வளர்ச்சியும்	A. தளம்பலற்ற விலை மட்டத்தை நிலையாகப் பேணல்
2. நிறைதொழில் மட்டம்	B. மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச்செய்தல்
3. பொருளாதார உறுதிப்பாடு	C. வணிக நடவடிக்கைகளின்போது சூழலுக்கு நேயமாகச் செயற்படல்
4. நிலைபேறான அபிவிருத்தி	D. புதிய தொழில்வாய்ப்பினை உருவாக்குதல்

X நிரலில் காட்டப்பட்டுள்ள அரசின் இலக்குகளுக்கேற்ப Y நிரலில் தரப்பட்டுள்ள வணிகங்களின் பங்களிப்புக்களைச் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

(1) A, C, D, B (2) B, D, A, C (3) B, D, C, A
(4) A, B, C, D (5) D, B, A, C (……..)

15. அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற முறைகளும் அவற்றிற்கான உதாரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

செல்வாக்குச் செலுத்தும் முறை	உதாரணம்
A. உட்கட்டமைப்பு வசதி வழங்கல்	❖ தனியார் துறைக்கு போட்டியாக அரச துறை நிறுவனங்களை உருவாக்கல்
B. போட்டியாளராகச் செயற்படல்	❖ தனியார்துறைக்குச் சமமானதாக வியாபார நிலையங்களை நிர்மாணித்து வாடகைக்கு விடல்
C. வாடிக்கையாளராகச் செயற்படல்	❖ விவசாயிகளிடம் நெல் கொள்வனவு செய்தல்
D. கொள்கைகளை உருவாக்கல்	❖ மின்சார வசதி மற்றும் வீதிப்பராமரிப்புகளை மேற்கொள்ளல்

அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்தும் முறையையும், அதற்கான உதாரணங்களையும் சரியாகக் காட்டும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

(1) B, C (2) A, B (3) A, C (4) C, D (5) A, D (……)

❖ **16 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

16. (அ) வணிகமொன்றின் ஆரம்பத்திற்கும், வாழ்தன்மைக்கும் தேவையான அகரீதியான பிரிவினர்களாக …….. இருப்பதுடன், வணிகத்தின் நீண்டகால வாழ்தன்மையை உறுதிப்படுத்துவதற்குரிய புறப்பிரிவினராக இருப்பது …….. ஆகும்.
(ஆ) வணிகம் முன்வைக்கின்ற பொருட்கள் அல்லது சேவைகளுக்குச் சமமான உற்பத்திகளை முன்வைக்கின்ற ஏனைய வணிகங்கள் ……..……..…….. எனப்படுவதோடு, இவை வணிகத்தின் ……..……. சூழல் காரணிக்குள் உள்ளடங்குகின்றது.

17. (அ) எதிர்கால சமூகத்திற்காக நிறுவனம் ஒன்றில் கட்டியெழுப்பப்படும் மரபுகள் நிறுவன …….. என அழைக்கப்படுவதுடன் இவற்றின் சாதகமான நிலைமை நிறுவனத்திற்கு ஓர் …… ஆகவும் காணப்படும்.
(ஆ) வணிகத்தின் பிரிவுகளாக …… , …… காணப்படுகின்றது.

18. (அ) வணிகங்கள் தன்னுடன் கரும மாற்றும் தரப்பினர்களிற்கு நல்லவை தீயவை தொடர்பாக விளங்கி செயற்படுதல் வணிகங்களின் …… என்பதுடன் அதனை நிறுவனம்ஒன்று எழுத்து வடிவில் முன்வைக்கும் போது …… எனவும் அழைக்கப்படும்.

(ஆ) சூழல் பாதுகாப்பு ..... சார் சமூகப்பொறுப்பாக கருதப்படுகையில், தொழில் பாதுகாப்பு ..... சார் சமூகப்பொறுப்பாக கருதப்படுவதுண்டு.

19. (அ) பொருளொன்றின் பொதியிடலில் விலையில் மாற்றம் செய்தல் மற்றும் காலாவதியாகும் திகதி குறிப்பிடாதிருக்கும் போது நுகர்வோரின் (1) ..... (2) ..... உரிமைகள் மீறப்பட்டுள்ளமையை அறிய முடியும்.

ஆ) இலங்கையில் முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் நுகர்வோருக்கு போட்டி விலையில் பொருட்கள், சேவைகளை தேவையான அளவில் வழங்குவதை உறுதியளிக்கும் நிறுவனமாக ..... காணப்படுவதுடன், ... நிறுவனமானது இலங்கையில் தேசிய, சர்வதேச தர நியமங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

20. (அ) தனிநபர்களின் அல்லது வணிகங்களின் வருமானம் செல்வம் அல்லது சொத்துக்கள் என்பவற்றிற்கேற்ப அறவிடப்படுகின்ற வரி.....என அழைக்கப்படுவதுடன் வரியினை செலுத்துபவர் ஏற்றுக்கொள்ளத் தேவையற்ற ஏனையவர்களின் மீது சுமத்தக்கூடிய வரி.....எனப்படும்.

ஆ) சமூக நிலைபேறான அபிவிருத்தியினதும் பொருளாதார நிலைபேறான அபிவிருத்தியினதும் சேர்க்கை ..... எனவும் சூழல் நிலைபேறான பாதுகாப்பினதும், பொருளாதார நிலைபேறான அபிவிருத்தியினதும் சேர்க்கை ..... எனவும் அழைக்கப்படும்.

❖ **21 முதல் 25 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

21. *பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்களின் பங்களிப்புக்களைக் குறிப்பிடுக.*

(1) .....
(2) .....
(3) .....
(4) .....

22. இலாபம் உழைத்தல் என்பதனை தவிர வணிகங்கள் கொண்டிருக்கும் வேறு நான்கு நோக்கங்களைக் குறிப்பிடுக.
(1) .....
(2) .....
(3) .....
(4) .....

23. பின்வரும் உற்பத்திப்பொருட்களுக்கு இவ்விரண்டு பதிலீட்டுப்பொருள் உற்பத்திகளைக் குறிப்பிடுக.
(1) சவர்காரம் ....
(2) கணினி ....

24. சூழலின் நிலைபேறான தன்மையினை உறுதிப்படுத்த வணிகங்கள் செயற்படும்போது விசேடமாக கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கு தருக.
(1) .....
(2) .....
(3) .....
(4) .....

25. வணிகர்களால் நுகர்வோருக்கு இழைக்கப்படும் முறைகேடுகளுக்கு நான்கு உதாரணம் தருக.
(1) .....
(2) .....
(3) .....
(4) .....

Past Papers Wiki

பகுதி II

அறிவுறுத்தல்கள் :
ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

பகுதி அ

(1)

க.பொ.த உயர்தரம் வர்த்தகப்பிரிவில் கல்வி கற்ற ஆனந்தி என்பவர் உணவு பதனிடல் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறி ஒன்றினை பூர்த்தி செய்ததன் பின்னர் பல்வேறு மூலிகை இலைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் அப்பளங்களை தயாரிக்கும் வணிகமொன்றை 'இயற்கை' அப்பள உற்பதிகள் என்ற பெயரில் நடாத்தி வருகின்றார். தற்போது இயற்கை மற்றும் மூலிகை சார்ந்த உணவுப்பொருட்களை நுகர்வதில் மக்கள் ஆர்வம் காட்டுகின்றமையால் ஆனந்தியின் அப்பள உற்பத்திகளுக்கு கேள்வி அதிகரித்தது. ஆனந்தி தனது உற்பத்திப்பொருட்களை உள்ளூர் சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகித்து வருகின்றார்.

(i) (அ) ஆனந்தியின் வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் மனித தேவையினையும், விருப்பத்தினையும் குறிப்பிடுக.
(ஆ) மேற்படி வணிகத்தின் பலம் ஒன்றினையும், வாய்ப்பு ஒன்றினையும் குறிப்பிடுக.(2 புள்ளிகள்)

(ii) ஆனந்தியின் வணிகத்தை பின்வரும் நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.
(அ) நோக்கம் (ஆ) உரிமை
(ஈ) துறை (உ) உற்பத்தியின் தன்மை (2 புள்ளிகள்)

(iii) (அ) 'பெறுமதி சேர்த்தல்' என்பதனால் கருதப்படுவது யாது?
(ஆ) ஆனந்தியின் வணிகத்தில் பெறுமதி சேர்த்தல் எவ்வாறு இடம்பெறுகின்றது என்பதை விளக்குக. (2 புள்ளிகள்)

(iv) இயற்கை அப்பள உற்பத்தி வணிகத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வணிகத் தொழிற்பாடுகளுக்கு உதாரணம் தருக.
(அ) உற்பத்தி (செயற்பாடு) (ஆ) சந்தைப்படுத்தல் (2 புள்ளிகள்)

(v) ஆனந்தியின் வணிகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய சமூகம் சார்ந்த சமூகப்பொறுப்புக்கள் நான்கு தருக. (2புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

(2)

(i) (அ) 'உற்பத்திப் பொருட்கள்" என்பதனால் கருதப்படுவது யாது?
(ஆ) உற்பத்திப் பொருட்களின் பிரதான வகைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) பொருட்களையும், சேவைகளையும் வேறுபடுத்திக் காட்டுக. (2 புள்ளிகள்)

(iii) (அ) 'இடர்' என்பதனால் கருதப்படுவது யாது?
(ஆ) வணிகமொன்றில் இடர் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் இரண்டு தருக. (2புள்ளிகள்)

(iv) வணிகமொன்றில் ஊழியர் பலமாக அமையக் கூடிய சந்தர்ப்பங்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

(v) இலத்திரனியல் வர்த்தகம் நிகழ்காலத்தில் பிரபல்யமடைவதில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணங்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

(03)

(i) வணிகங்கள் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதனால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) வணிகங்கள் சமூக ரீதியான பொறுப்புக்களை தேவைப்பாடு தொடர்பாக கூடிய அவதானம் நிகழ்காலத்தில் விருத்தியடைந்து செல்வதற்கான காரணங்கள் நான்கு தருக.

(iii) வணிக ஒழுக்கக் கோவை ஒன்றினைக் கட்டியெழுப்பும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) நிலைபேறான அபிவிருத்தியின் மூன்று பிரதான கோபுரங்களையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) கழிவுப்பொருள் முகாமைத்துவத்தின்போது சர்வதேசரீதியாக அவதானம் செலுத்தப்படும் 4R எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்) (மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி (ஆ)

(04)

(i) **(அ)** வணிகக் கருமங்களில் தாக்கத்தையேற்படுத்தும் காரணிகள் செயற்படுகின்ற சூழலின் வகைகள் இரண்டினையும் குறிப்பிடுக.

(ஆ) உதாரணம் ஒன்றினைக் குறிப்பிடுவதன் மூலம் பேரினச் சூழல் காரணிக்கும், அண்மிய சூழல் காரணிக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (2புள்ளிகள்)

(ii) பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

(அ) சுழற்சிப் பொருளாதாரம்

(ஆ) ஓரிரவு கொள்கை வீதம் (2புள்ளிகள்)

(iii) பொருட்களை கொள்வனவு செய்யும் போது எவ்வாறான தகவல்கள் காணப்படாதவிடத்து தகவல் பெறும் உரிமை மீறப்படுகின்றது எனக் கருதமுடியும் என்பதைக் குறிப்பிடுக. (2புள்ளிகள்)

(iv) மனித விருப்பங்களிற்கு காணப்படக்கூடிய பண்புகள் நான்கு தருக. (2புள்ளிகள்)

(v) அரசின் வரியல்லா வருமானங்கள் நான்கைக் குறிப்பிடுக. (2புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

(05)

(i) *கீழே சில வணிகச் செயற்பாடுகள் தரப்படுகின்றன.*

A – மீன்பிடிக் கைத்தொழில் B – உற்பத்தி கைத்தொழில்

C – சுரங்கமறுத்தல் D – நிர்மாணக் கைத்தொழில்

E – காட்டுவளம் F – கனிய அகழ்வு

மேற்படி வணிகங்களை பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.

(1) முதலாம் நிலை, இரண்டாம் நிலை

(2) விவசாயத்துறை, கைத்தொழில் துறை (2 புள்ளிகள்)

(ii) *வணிகச் சூழலை ஆய்வு செய்வதன் மூலம் வணிகரொருவர் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் நான்கு தருக?* *(2 புள்ளிகள்)*

(iii) *இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்காக தொழிற்படுகின்ற அரச நிறுவனங்கள் நான்கின் பெயர்கள் தருக.* *(2 புள்ளிகள்)*

(iv) *'நியாயமான வருமானப் பரம்பல்' என்பதனால் கருதப்படுவது யாது?* *(2 புள்ளிகள்)*

(v) *பொருளாதாரம் ஒன்றின் அக ரீதியான நிலைப்புத்தன்மை எவ்வாறு இடம்பெறுகின்றது?* *(2 புள்ளிகள்)*

(மொத்தம் 10 புள்ளிகள்)

(06)

(i) வணிகமொன்றின் அகச்சூழல் காரணிகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) 'வணிக ஒழுக்கம்' என்பதனால் கருதப்படுவது யாது? (2 புள்ளிகள்)

(iii) இலங்கையில் பணவழங்கலைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் நாணயக்கொள்கைக் கருவிகளினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iv) நுகர்வோர் பாதுகாப்பின் மூலம் வணிகர்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

(v) இலங்கை தரக்கட்டளை நிறுவனத்தின் கருமங்கள் / தொழிற்பாடுகள் நான்கு தருக. *(2 புள்ளிகள்)*

(மொத்தம் 10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library